<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LL.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 25-ஆம் நாள், வியாழன்கிழமை

**I.A. No. 2 of 2023 in O.S. No. 348 of 2013**

**(CNR No. TNSA-13000-255-2013**

1. நடேசன் த/பெ. பச்சமுத்து சேர்வை (வயது 54)
2. கஸ்தூரி க/பெ. கஸ்தூரி (வயது 47)
3. சதீஸ் த/பெ. நடேசன் (வயது 26)

அனைவரும் வசிக்கும் இடம் காட்டுக்கொட்டாய்,
கல்லாங்குத்துக்காடு அருகில், காட்டுக்கோட்டை கிராமம்,
தற்போது தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் .. மனுதாரர் / வாதிகள்

எதிராக

1. மணி த/பெ. லேட். பொன்னுசாமி சேர்வை (வயது 70)
2. ஜெயந்தி க/பெ. மணி சேர்வை (வயது 50)
3. ஸ்ரீமதி த/பெ. மணி சேர்வை (வயது 30)
4. பூவாயம்மாள் க/பெ. லேட். சுப்ரமணியன் (வயது 75)

அனைவரும் வசிக்கும் இடம் 7 வது வார்டு, பெரியார் நகர் வழி,
காட்டுக்கோட்டை கிராமம்,
தற்போது தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

மனு நாள் : 22.08.2023

நீதிமன்றக்கட்டணம்: ரூ.20/-

மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை வழக்குரையை திருத்தம் செய்ய உத்தரவு வேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 11.06.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்கள் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரர் / 2-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. திருமாவளவன் அவர்கள் ஆஜராகி பின்னிட்டு எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமல் தோன்றா தரப்பினராகியும், 3-ம் எதிர்மனுதாரர் / 3-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. ராமலிங்கம், அவர்கள் ஆஜராகி பின்னிட்டு எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமல் தோன்றா தரப்பினராகியும், 4-ம் எதிர்மனுதாரர் / 4-ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்பாணை</u>**

i மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

ii செலவுத் தொகை இல்லை.

25.07.2024-ம் நாளன்று எனது கையொப்பமும் இந்நீதி மன்ற முத்திரையும் இடப்பட்டது.

N. Th 25/7/24

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

**<u>கூ..மா.உ.நீ., ஆத்தூர்.</u>**

**இ.ம.வ. எண் 02/2023**

---------------

**அ.வ. எண் 348/2013**

**தீர்ப்பாணை**

# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LL.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, ஜுலை திங்கள் 25-ஆம் நாள், வியாழன்கிழமை

**I.A. No. 2 of 2023 in O.S. No. 348 of 2013**

**(CNR No. TNSA-13000255-2013**

1. நடேசன்
2. கஸ்தூரி
3. சதீஸ் .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. மணி
2. ஜெயந்தி
3. ஸ்ரீமதி
4. பூவாயம்மாள் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 11.06.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்கள் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரர் / 2-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. திருமாவளவன்

.. 2 ...

N. Th 25/7/24

அவர்கள் ஆஜராகி பின்னிட்டு எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமல் தோன்றா தரப்பினராகியும், 3-ம் எதிர்மனுதாரர் / 3-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. ராமலிங்கம், அவர்கள் ஆஜராகி பின்னிட்டு எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமல் தோன்றா தரப்பினராகியும், 4-ம் எதிர்மனுதாரர் / 4-ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவுரை**

மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை வழக்குரையை திருத்தம் செய்ய உத்தரவு வேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

2. **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :** மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில் அசல் வழக்கினை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்துக்கள் தங்களுக்கு 22.01.1980 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படியும், 25.12.1991 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின்படியும் பாத்தியப்பட்டது எனவும், ஏற்கனவே தாங்கள் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் நிரந்தர தடையுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி அசல் வழக்கு எண் 65/2010-ஐ தாக்கல் செய்து அதில் தங்களுக்கு ஆதரவாக 30.05.2011 தேதியன்று தீர்ப்பானதாகவும், தாவா சொத்து சம்மந்தமான தங்களுடைய உரிமையை பாதிக்கும் விதமாக மீண்டும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களிடம் பிரச்சனை செய்ததாகவும், அதனால் விளம்புகை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், தங்களுக்கு தெரியாமல் தாவா சொத்து சம்மந்தமாக அசல் வழக்கு எண் 65/2010 தீர்ப்புக்கு பின்னிட்டு 2009-ம் ஆண்டில் 1-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்து

N.Th. 28/7/24

விட்டதாகவும், 2014-ல் 4-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதிக்கு ஒரு கிரயப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகவும், தற்போது தான் அது குறித்து தாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் விசாரித்தபோது தான் மேற்படி சங்கதிகள் குறித்து தங்களுக்கு தெரிய வந்ததாகவும், ஏற்கனவே எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை இருந்தபோதிலும் தங்களுடைய சுவாதீனத்தில் இருந்து வரும் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக அவர்கள் ஏற்படுத்தியுள்ள 18.06.2014 தேதியிட்ட கிரயப் பத்திரமும், 23.12.2009 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரமும் செல்லத்தக்கதல்ல என்றும், அது சம்மந்தமாக பரிகாரம் கேட்டு அசல் வழக்கில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், இதனால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வழக்கில் எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை என்றும், வழக்கில் எவ்வித மாற்றமும் ஏற்பட போவதில்லை என்றும், வழக்கிற்கு தீர்வு காண எளிதாக இருக்கும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

3. <u>**1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**</u> 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனு சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், அசல் வழக்கு எண் 65/2010-ல் 30.05.2011 தேதியன்று மனுதாரர்கள் / வாதிகள் கூறியவாறு தீர்ப்பானது உண்மை தான் என்றும், ஆனால் அந்த தீர்ப்பு தவறான நபருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகவும், தான் தனது மகள் இளவராக இருந்தபோதே தன்னுடைய பாகம் பிரியாத பங்கினை தனது மகள் பெயருக்கு எழுதிக் கொடுத்துவிட்டதாகவும், அசல் வழக்கு எண் 65/2010-ல் இடை மனு எண் 1072/2013-லேயே இது குறித்து தன்னுடைய எதிருரையில் சொல்லியிருப்பதாகவும், எனவே ஆவணங்கள் குறித்து தங்களுக்கு தற்போது தான் தெரிய வந்தது என்று மனுதாரர்கள் / வாதிகள் கூறியிருக்கும் சங்கதி பொய்யனாது என்றும், மேலும் 23.12.2009 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறித்து மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள திருத்தமானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், காலவரையறையினால் பாதிப்படைந்த ஒன்று என்றும், மேலும் 18.06.2014 தேதியிட்ட கிரய ஆவணத்தின் கிரயதாரரும் அசல் வழக்கு எண் 65/2010-ன்

N. Thi 25/7/24

தரப்பினர் அல்லாததால் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை அவரை கட்டுப்படுத்தாது என்றும், ஏற்கனவே இது குறித்து தன்னுடைய பதிலுரையில் தான் கூறியிருப்பதாகவும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள் / வாதிகள் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கை காட்டுக்கோட்டை கிராமம் புல எண்கள் 603/9, 115/1, 117/3B ஆகியவற்றில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது. அந்த வழக்கிற்கு 26.08.2014 தேதியன்று 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் பத்தி எண் 15 மற்றும் 16-ல் 23.12.2009 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறித்தும், 18.06.2014 தேதியிட்ட கிரய ஆவணம் குறித்தும் 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி தெரிவித்துள்ளார் என்பது தெரியவருகிறது. ஆனால் மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில் தங்களுக்கு மேற்படி ஆவணங்கள் குறித்து தற்போது தான் தெரிய வந்ததாக கூறி அந்த ஆவணங்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோருவதற்காக வழக்கினை திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். காலவரையறைச் சட்டம் ஷரத்து 59-ன்படி அந்த ஆவணம் குறித்து வாதிக்கு தெரிய வந்த தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள்ளாக அந்த ஆவணத்தை ரத்து செய்யவோ அல்லது இல்லா நிலையது என விளம்புகை பரிகாரம் கோருவதற்கோ 3 வருடங்கள் காலவரையறை வழங்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 26.08.2014 தேதியன்று 1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையிலேயே 18.06.2014 தேதியிட்ட கிரய ஆவணம் மற்றும் 23.12.2009 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறித்து கூறியிருப்பதால் பதிலுரை தாக்கல் செய்த தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள்ளாக மனுதாரர்கள் / வாதிகள் அந்த ஆவணங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும். எனவே ஆவணங்கள் தொடர்பாக

V.Th
28/11/24

விளம்புகை பரிகாரம் கோருவதற்குண்டான காலவரையறை தாண்டி தற்போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு இந்நீதிமன்றம் ஏற்ககூடியதாக இல்லை என்றே கருதுகிறது. மேலும் மாண்பமை உயர்நீதிமன்றம் P. மாரியப்பன் எதிர் மோகன்குமார் (2021(5) CTC 727) என்ற வழக்கில் காலவரையறை தோசத்தால் பாதிப்படைந்துள்ள பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க இயலாது என்று கூறியுள்ளதன் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் இம்மனுவை ஏற்ககூடியதாக இல்லை என்றே கருதுகிறது. ***மேலும் மாண்பமை உச்சநீதிமன்றமும் M/s. சௌத் கொங்கன் டிஸ்டில்லரீஸ் மற்றும் ஒருவர் எதிர் பிரபாகர் கஜனன் நாயக் மற்றும் பலர் (https://indiankanoon.org/doc/742712/) என்ற வழக்கில் 09.09.2008 அன்று பிறப்பித்த முன் தீர்ப்பில் காலவரையறையினால் பாதிப்படைந்துள்ள பரிகாரத்தைப் பொறுத்து சாட்டுரைகளில் திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க இயலாது என்றும் கூறியுள்ளது.*** எனவே மேற்படி முன் தீர்ப்பின்படி மனுதாரர்கள் / வாதிகள் மனுவில் கோரியுள்ள வழக்குரை திருத்தத்தின் மூலம் கோரியுள்ள பரிகாரமானது காலவரையறையினால் பாதிப்படைந்துள்ளதாக கருதி இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என முடிவு செய்து இந்நீதிமன்றம் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

6. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 25-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N. Thi 25/7/24

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

| | |
|---|---|
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

N. Th 28/1/24

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>

இ.ம.வ. எண் 2/2023

---------------

அ.வ. எண் 348/2013

அசல் / ~~வரைவு~~ உத்தரவுரை

நாள் : 25.07.2024